சான்லாக்ஸ்
பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ்

**OPEN ACCESS**

Manuscript ID:
TAM-10012025-9272

Volume: 10

Issue: 1

Month: July

Year: 2025

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 25.05.2025

Accepted: 27.06.2025

Published: 01.07.2025

Citation:
Sivaramakrishnan, JR. 2025. "A Historical and Archaeological Study of Dharmanallur Village." *Shanlax International Journal of Tamil Research, 10*(1), 72–79.

DOI:
https://doi.org/10.34293/tamil.v10i1.9272

*Corresponding Author:
sivaramanachaeo@gmail.com

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# A Historical and Archaeological Study of Dharmanallur Village

**Dr. J.R. Sivaramakrishnan**
*Assistant Professor, Department of History*
*Kunthavai Naachiyaar Government Arts College for Women, Thanjavur*
*https://orcid.org/0009-0000-0676-0981*

**Abstract**
*The present research paper is an attempt to give a Historical and Archaeological overview on Dharmanallur village, near Sethiathope in Cuddalore district. The objective of the present research is to explore and understand the historical background of Dharmanallur village. The area selected for the purpose of study includes the rural archaeology which is a field focused on understanding the past human societies in the ancient period.*

***Keywords:*** *Dharmanallur, Cuddalore, Rural Archaeology, Explore*

**References**
1. Puliur Kesigan, Purananuru, Sarada Publications, Chennai, Poem No. 18.
2. Ve. Vetasalam, History of Villages in Pandya Country, Dhanalakshmi Publications, Thanjavur, p. 19.
3. Ibid., p. 22.
4. Ibid., p. 26.
5. K.Rajan, Archaeological Gazetteer of Tamil Nadu, Manoo Pathippakam, Thanjavur, P.320.
6. Ka. Rajan, Ra. Sivanantham, The Antiquity of Iron, Tamil Nadu Government Department of Archaeology, Chennai, p. 37.
7. K. Rasavelu, Ko. Thirumurti, Archaeological Excavations of Tamil Nadu, Cultural Publications, Chennai, p. 135.
8. Maraimalaiadigal, Pattinappalai, Manivaasakar Publications, Chidambaram, p. 18.
9. A.R.E., 1906, No.234.
10. R. Poongunran, Tholkudi Velir Rulers, New Century Book House (P) Ltd., Chennai, p. 23.

# வரலாற்றுத் தொல்லியல் நோக்கில் தர்மநல்லூர் ஊராய்வு

***முனைவர் ஜெ. ஆர். சிவராமகிருஷ்ணன்***
உதவிப் பேராசிரியர், வரலாற்றுத்துறை
குந்தவை நாச்சியார் அரசினர் கலைக்கல்லூரி (தன்னாட்சி), தஞ்சாவூர்

***ஆய்வுச் சுருக்கம்***
*ஒரு நாட்டின் பழங்கால வரலாற்றையோ, பண்பாட்டினையோ அறிந்துக்கொள்ள இலக்கியங்கள், கல்வெட்டுக்கள், நாணயங்கள், பிற நினைவுச்சின்னங்கள் எந்த அளவிற்கு துணைநிற்கின்றனவோ அந்த அளவிற்கு துணைபுரியும் தன்மை ஊர்ப் பெயர்களுக்குண்டு. எனவேதான் ஊர்ப்பெயர்களை பழைமையின் எச்சங்கள் என்கிறோம். ஊர் உருவாக்கம் என்பது தமிழர்களின் திணைசார்புடையதாக இருப்பினும் அது இனவரைவியலோடு நெருங்கியத் தொடர்புடையது. ஊராய்வு என்பது புதைபொருள் ஆய்வைப் போன்று வரலாற்றிற்கு முற்பட்ட காலத்தைப் பற்றி கூறும் தன்மையுடையது. எனவேதான் மேற்கத்திய நாடுகளில் மனித பரிணாம வரலாற்றினை அறிவியல் தொழில்நுட்பத்தோடு ஆராய்கின்றபோது ஊரகத்தொல்லியலை மையப்படுத்தியே செயல்பட்டுவருகின்றனர். இக்கருத்துருவை அடிப்படையாகக் கொண்டு கடலூர் மாவட்டம் தர்மநல்லூர் என்ற ஊரில் நடத்தப்பட்ட தொல்லியல் கள ஆய்வில் திரட்டப்பட்டத் தரவுகளைக் கொண்டு அவ்வூரின் வரலாற்றுப் பின்புலத்தை வெளிக்கொண்டு வரும் முயற்சியே இக்கட்டுரையாகும்.*

***திறவுச்சொற்கள்: தர்மநல்லூர், ஊரகத் தொல்லியல், இரும்புக்காலம், தமிழ்பிராமி,*** *வரலாறு*

**முன்னுரை**

ஐந்திணைகளின் துவக்கமே ஊராக்கத்தின் திறவுகோல் எனலாம். ஊர் என்ற சொல் சங்க காலத்தில் வயலும் வயல் சார்ந்த மருத நிலத்தில் உழவுத் தொழிலை முதன்மைத் தொழிலாகக் கொண்ட வேளாண்குடி மக்கள் வாழ்ந்த இடத்தைச் சுட்டும் சொல்லாடலாகும். குறிஞ்சித் திணையில் ஏற்பட்ட உற்பத்தி குறைபாடுகளைச் சரிசெய்யும் பொருட்டு மனிதன் முல்லை நிலத்திற்கு பயணித்திருக்க வேண்டும். இங்கு பரந்துபட்ட நிலப்பரப்பும், அதன் மூலம் பாதுகாப்பான உணவு உற்பத்தியும் நடைபெற்றது. ஆனால் நிரந்தர நீர்மேலாண்மை என்ற அலகு அங்கு பற்றாக்குறையாக இருந்தது. இதைச் சரிசெய்யும் பொருட்டு மானிடம் அடுத்தக்கட்ட நகர்வாக மருத நிலத்திற்குள் சங்கமித்தது. “உணவு எனப்படுவது நிலத்தொடு நீரே”[1] என்ற கோட்பாட்டிற்கு ஏற்ப மருத நிலத்தில் உணவு உற்பத்தியைத் தீர்மானிக்கும் அனைத்துக் காரணிகளும் சாதகமாக இருந்ததாலே அவர்களால் உணவு உற்பத்தியில் தன்னிறைவைப் பெறமுடிந்தது. இங்கு மானிடத்திற்கு கிடைத்த உபரி உற்பத்தி பண்டமாற்று வர்த்தகத்திற்கு வித்திட்டது. இந்த உபரி உற்பத்தியின் அடுத்தக்கட்ட நகர்வாக ஊர்களின் உருவாக்கம் இருந்தது. இங்கு தான் அதிகார கட்டமைப்புகள் தோற்றம் பெற்றன. இது அரசு உருவாக்கத்திற்கு வித்திட்டது. இதனால்தான் பழமை வாய்ந்த அத்தகைய ஊர்களில் வேளாண்குடிகள் நிரப்பப்பட்டிருப்பதை இன்றும் காண்கிறோம். இவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்த ஊர்களின் துவக்கம் பற்றிய ஆய்வுகளை முழுமையாக மேற்கொள்வது அவசியமான ஒன்றாகும். இந்த மையப் பொருளினை அடிப்படையாகக் கொண்டது தர்மநல்லூர் பற்றிய ஊர் பெயர் ஆய்வாகும்.

### அமைவிடமும் நிலவியல் அமைப்பும்

கடலூர் மாவட்டம், விருத்தாசலம் வட்டம், கம்மாபுரம் ஒன்றியத்தில் தர்ம நல்லூர் (N:77.49.26, E:16.49.11) அமைந்துள்ளது. தர்மநல்லூர் கிராமத்திலிருந்து தெற்கே சுமார் 3 கி.மீ தூரத்தில் வெள்ளாறு பாய்ந்தோடுகிறது. இப்பகுதி வளமையான வண்டல்மண் பிரதேசமாகும். இங்கு மூன்று போகம் விவசாயம் நடைபெறுகிறது. நெல் பிரதான சாகுபடிப் பயிராகும். தர்மநல்லூரின் தெற்கே உள்ள பெரியத்தோப்புப் பகுதியில் சுமார் 4 ஏக்கர் பரப்பளவில் பண்பாட்டுப் பகுதி யொன்றுள்ளது. இப்பகுதியில் தொடர்ந்து மண் அள்ளப்பட்டுவருவதால் சுமார் 20 அடி ஆழப்பள்ளம் காணப்படுகிறது. இப்பள்ளத்தில் 15 அடிக்கு கீழே வெட்டுப் பகுதியில் (section) ஆற்று மணலுடன் பண்டையக்கால மக்களின் புழங்குப் பொருட்களின் சிதைவுகள் காணப்படுகின்றன. இங்கு ஆற்றுமணல் எப்படி வந்தது என்பது குறித்து சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழக நிலவியல் துறையினர் மேற்கொண்ட ஆய்வில், இப்பகுதியில் தொல் நீர்வழிப் பாதையொன்று சென்றிருப்பதாகத் தெரிவித்துள்ளனர். இந்த தொல் நீர்வழிப்பாதையின் போக்கை ஆய்வு செய்ததில், எறும்பூர் வழியாக பதினாறுகண்பாலம், எம். ஆர்.கே.சர்க்கரை ஆலையின் வடபகுதி வரைச் சென்று மீண்டும் வெள்ளாற்றில் கலந்துள்ளதை களஆய்வின் வழியே உறுதிப்படுத்தப் பட்டுள்ளது. இந்த வழித்தடம் கால வெள்ளத்தில் ஆக்கிரமிக்கப்பட்டுவிட்டதால் வெள்ளக் காலங்களில் தண்ணீர் இவ்வழியாகப் பயணிப்பதால் பயிர்சேதம் ஏற்படுவதை தற்காலத்திலும் காணமுடிகிறது. இதன் மூலம் சுமார் 5000 ஆண்டுகளுக்கு முன்பு வெள்ளாற்றின் வழித்தடம் தர்ம நல்லூரை ஒட்டி பயணித்துள்ளது எனலாம். இந்த வழித்தடத்தின் அருகேதான் பண்டையக்கால மக்கள் வாழ்ந்துள்ளனர்.

### ஊர் உருவாக்கத்தின் முக்கியக் கூறுகள்

பண்டைய தமிழகத்தில் புதியதாக உருவாக்கப்பட்ட ஊர்கள் அனைத்தும் ஒரு வரையறைக்குள் கட்டமைக்கப் பட்டவைகளாகும். பொதுவாக ஊர்ப் பெயர்களை முன்னொட்டு, கரு, பின்னொட்டு என மூன்றாகப் பிரித்து அதன் தொன்மையை அறியலாம்.[2] அதனடிப்படையில் தர்மநல்லூரை - தர்ம(ம்) நல் ஊர் என பிரித்தால் முன்னொட்டு என்பது தர்மம் ஆகும். கரு என்பது நல். பின்னொட்டு ஊர் என்பதாகும். பொதுவாக ஊர், குடி என்ற பின்னொட்டுக்கள் வேளாண்குடிச் சமூகத்திற்கு உரிமையுடைய ஊர்களைக் குறிக்க வழங்கப்பட்டவைகளாகும்.[3] மேலும் கோயிலுக்கு உரிமையுடைய நிலங்களைப்பெற்று விளங்கிய வெள்ளான் வகை ஊர்களும் நல்லூர் என்ற பின்னொட்டுக்களுடன் அழைக்கப்பட்டுள்ளன. நல்லூரின் நிர்வாகம் பெரும்பாலும் வேளாண்குடி சமூகத்தினரிடமே இருந்தது. அரசுக்குச் செலுத்தவேண்டிய அவ்வூரின் வரிகள் மட்டுமே கோயிலுக்குச் செலுத்தப்பட்டன. நல்லூர் என்ற பின்னொட்டு கி.பி.10ஆம் நூற்றாண்டிற்கு முன்னர் பிராமணர் குடியிருந்த ஊர்களையும் குறிப்பதாக விளக்கியுள்ளன.[4] இக்கருத்தியலோடு தர்மநல்லூர் ஒத்திருப்பதாகவேக் கருதலாம். காரணம் இப்பகுதியில் வேளாண் உற்பத்தியே பிரதான தொழிலாக உள்ளதால் இங்கு வேளாண்குடி மக்களும், உழு குடிகளும் அதிகம் வாழ்ந்து வருகின்றனர்.

### ஊரகத் தொல்லியலின் முக்கியத்துவம்

தமிழகத்தில் நில அகழாய்வுகள் குறைந்த பரப்பளவிலேயே நடைபெற்றுள்ளன. அதனால்தான் தமிழ்ச் சமூகம் பற்றிய முழுச்சரித்திரமும் நமக்கு கிடைக்கவில்லை. பண்டையக்கால ஊர்கள் இருந்த இடங்களில் இடத்தேர்வு இடர்பாட்டினால் தற்பொழுது அகழாய்வுகள் மேற்கொள்வதில் சிக்கல்கள் ஏற்பட்டுவருகின்றன. ஆனால் மேலை

நாட்டவர் இதுபோன்ற காரணங்களுக்காக அப்பகுதிகளைக் கைவிடுவது இல்லை. ஊர்ப்பகுதியில் கிடைக்கும் சொற்ப பகுதியானாலும் அவ்விடத்தில் அறிவியல் தொழில்நுட்ப அடிப்படையில் மிக நுணுக்கமான அகழாய்வினை மேற்கொண்டு, அப்பகுதியில் நிலைப்பெற்றிருந்த பண்பாட்டுக் கூறுகளை வெளிக்கொண்டு வருகின்றனர். இதுதான் அந்நாட்டின் வரையறுக்கப்பட்ட சரித்திரத்தை சரியான காலக்கணிப்பின் அடிப்படையில் வெளிவருவதற்கு காரணமாக உள்ளது. இதுபோன்ற ஆய்வுக்கட்டமைப்புகளில் இந்தியாவில் எவரும் கவனம் செலுத்தாதது பெருங்குறையே. சமீபத்திய நமது ஆய்வு முன்னெடுப்புகள் அனைத்தும் பண்டைய நகரங்களைமுன்னிலைப்படுத்தியே சுழன்று வருகிறது. இந்நிலை மாறவேண்டும். இந்தியாவிலும் சரி தமிழ்நாட்டிலும்சரி ஊரகத்தொல்லியலில் (Rural Archaeology) நாம் அதிக கவனம் செலுத்த வேண்டும். இதை ஓரளவு ஈடு செய்யும் முயற்சியும் தற்பொழுது தமிழகத்தில் நடைபெற்று வருவது (தஞ்சாவூர் தமிழ்ப் பல்லைக்கழகத்தின் கடல்சார் வரலாறு மற்றும் கடல்சார் தொல்லியல்துறைப்பேராசிரியர்வீ.செல்வக் குமார் அவர்கள் மேற்கொண்ட அம்பல், நாங்கூர், மோலபாளையம், ஆண்டிப்பட்டி போன்ற ஊரக அகழாய்வுகள்) கூடுதல் சிறப்பாகும். இக்கருத்தியலை முன்னோக்கமாகக் கொண்டு தர்மநல்லூர்ப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட களஆய்வில் திரட்டப் பட்டத் தரவுகளின் அடிப்படையில் இப்பகுதியில் வாழ்ந்த தொல்குடிகளின் சரித்திரத்தை ஓரளவு மீட்டுருவாக்கம் செய்யும் முயற்சியே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## களஆய்வு

தர்மநல்லூர் அருகே எறும்பூர் என்ற ஊர் உள்ளது. இங்கு கடம்பவனேஷ்வரர் என்ற கோயிலை முதலாம் பராந்தகன் கட்டியுள்ளான். தர்மநல்லூரின் வடக்கே கங்கைகொண்டான், மும்முடி என்ற பெயரில் ஊர்கள் உள்ளன. இப்பெயர்கள் இராஜேந்திரசோழனின்விருதுப்பெயர்களாகும். அந்தடிப்படையில் தர்மநல்லூர் பகுதியில் களஆய்வு மேற்கொள்ளப்பட்டது. கடந்த 1997ஆம் ஆண்டு மேனால் தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக் கழகப் பேராசிரியர் கா.ராஜன் அவர்களால், தர்மநல்லூர் பெரியத்தோப்புப் பகுதியில் இரும்புக் காலத்தைச் சார்ந்த முதுமக்கள் தாழிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.[5] ஆனால்கடந்த 2007ஆம் ஆண்டு நடைபெற்ற களஆய்வில் மண்ணின் மேற்பரப்பில் முன் மற்றும் பின் இடைக்காலத்தைச் சார்ந்த தொல் பொருட்கள் சேகரிக்கப் பட்டுள்ளன. இப்பண்பாட்டுப்பகுதியில் வண்டல் அதிகம் கிடைப்பதால் திருவிழாக் காலங்களில் மக்கள் வீட்டு உபயோகத்திற்காகத் தொடர்ந்து வெட்டி எடுக்கப்பட்டு வந்ததால் சுமார் ஒரு ஏக்கர் பரப்பளவில் இருபது அடி ஆழத்தில் பள்ளங்கள் காணப்படுகின்றன. இப்பள்ளத்தில் இருந்து முதுமக்கள் தாழிகளின் உடைந்த பாகங்கள், கருப்பு - சிவப்பு நிறப் பானை ஓடுகள் போன்றவை கடந்த 2007-2010-2013ஆம் ஆண்டு நடைபெற்ற கள ஆய்வில் சேகரிக்கப் பட்டுள்ளன.

## பெருங்கற்காலம்

இக்காலத்தை இரும்புக்காலம் என்பர். இரும்பின் பயனை மனிதன் முழுமையாக அறிந்தகாலம். இக்காலக்கட்டத்தில் வாழ்ந்த மனிதன் வேளாண்மை, கால்நடை வளர்த்தல், இரும்பை உருக்கி ஆயுதங்கள் செய்தல் போன்றவற்றில் ஈடுபட்டதோடு எழுத்தறிவையும் பெற்றுத் திகழ்ந்தான். தமிழகத்தில் இரும்புக்காலம் கி.மு.3345 தொடங்குகிறது.[6] கடந்த 2013ஆம் ஆண்டு பெரியத்தோப்புப் பகுதியில் 8-ற்கும் மேற்பட்ட சிதைந்த

முதுமக்கள் தாழிகள் காணப்பட்டன. தாழி ஒன்றின் உள்ளே 30 செ.மீ நீளமுள்ள இரும்பாலான குத்துவாள் ஒன்று காணப் பட்டது. இங்கிருந்து தெற்கே இருபது அடி தூரத்தில் முற்றிலும் சிதைக்கப்பட்ட மற்றொரு தாழியின் அருகே இரும்புக் கருவிகளின் உடைந்த பாகங்கள் சேகரிக்கப் பட்டன. இதன் மூலம் இப்பண்பாட்டுப் பகுதியில் வாழ்ந்த மக்கள் இரும்பின் பயன்பாட்டினை அறிந்திருந்தனர் என்பதை உணர்கிறோம். இங்கு இரும்பு தயாரிப்புக் கூடங்கள் இருந்ததற்கான சான்றுகள் கிடைக்கவில்லை. எனவே இம்மக்கள் தங்களுக்குத் தேவையான இரும்பு புழங்கு கருவிகளைப் பிறப்பகுதி மக்களிடமிருந்து பண்டமாற்று முறையில் வாங்கியிருக்கலாம்.

### கீறல் குறியீடுகள்

கடந்த 2013ஆம் ஆண்டு பெரியத் தோப்புப் பகுதியில் சிதைந்த முதுமக்கள் தாழி ஒன்றின் அருகே சேகரிக்கப்பட்ட கருப்பு - சிவப்பு நிற பானை ஓடுகள் சிலவற்றில் கீறல் குறியீடுகள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. ஐந்து பானை ஓடுகளில் பொறிக்கப்பட்டிருந்த குறியீடுகள் ஒரே மாதிரியாகவும், மற்றொன்றில் வித்தியாசமான குறியீடுகள் கீறப்பட்டிருந்தன. அப்பானைஓட்டினைஆய்வுசெய்தமறைந்த பத்மஸ்ரீ ஐராதம் மகாதேவன் அவர்கள் இவை சிந்துசமவெளி குறியீடுகளோடு பொருந்துவதாகக் கூறினார். பிற குறியீடுகள் இறந்தவர்களைப் புதைக்கப் பயன் படுத்தப்பட்ட பெருங்கற்படைப் பகுதி மற்றும் வாழ்விடப் பகுதிகளில் நடைபெற்ற அகழாய்வுகளில் கிடைத்துள்ள கீறல் குறியீடுகளோடு ஒத்துள்ளது என்றும் தெரிவித்தார். தமிழகத்தில் கிடைக்கப்படும் இக்கீறல் குறியீடுகளில் இருந்தே தமிழ் மொழி வளர்ச்சி பெற்றதாகத் தொல்லியல் அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர். அதனால்தான் தமிழகத்தில் கிடைத்துள்ள பெரும்பாலான மட்பாண்டம், குறியீடுகள் ஒத்தத் தன்மையோடு இருப்பதைக் காணமுடிகிறது. தர்மநல்லூரில் கிடைத்துள்ள கீறல் குறியீடு களைப் போன்று கடலூர் மாவட்டத்தில் உள்ள வட ஹரிராஜபுரம், கொண்டா ரெட்டிப்பாளையம், வடலூர், பாலக் கொல்லை, மருங்கூர், போன்ற பகுதிகளிலும் கிடைத்துள்ளன. மேலும் கொடுமணல், கீழடி, அழகன்குளம், அரிக்கமேடு போன்ற இடங்களில் நடைபெற்ற அகழாய்விலும் கிடைத்துள்ளன.

### தமிழ் பிராமி எழுத்து

பெரியத்தோப்பின் தென்பகுதியில் காணப்படும் 20 அடிபள்ளத்தில் கருப்பு - சிவப்பு நிறப் பானை ஓடுகள், செங்காவிப் பூசப்பட்டப் பானை ஓடுகள், வழுவழுப்பான கருப்பு நிறப்பானை ஓடுகள் சேகரிக்கப்பட்டன. அவற்றில் உடைந்த கிண்ணம் ஒன்றின் விளிம்புப் பகுதியின் கீழே எழுத்துக் கீறல்கள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. அவ்வெழுத்துக்களை ஆய்வு செய்த மேனாள் தமிழ்நாடு அரசு தொல்லியல்துறையைச் சார்ந்த இராசகோபால் அவர்கள் "ய-ம-க-ன்" என்று வாசித்ததோடு இதற்கு தமிழ் அகராதிகள் கடைச்சன், கடைசிமகன், இளையமகன் என பொருள் விளக்கம் தருகின்றன வென்றும், கீறப்பட்டுள்ள எழுத்துக்களின் காலம் கி.மு.2ஆம் நூற்றாண்டாக இருக்கலாமெனத் தெரிவித்துள்ளார். ஆனால் முனைவர் ஆ.பத்மாவதி அவர்கள் யமகன் என்பதை எமன் + மகன் = எமன்மகன் என்றும் எமன் என்பவன் நேரம் தவறாது தமது பணியினை விரைந்து ஆற்றும் வல்லமையுடையவன். எனவே அத்தகையவனின் இயல்பினனாக இவனும் திகழவேண்டுமென்பதாலேயே "யமகன்" என்ற பெயரினை இவனது பெற்றோர்களால் சூட்டப்பட்டிருக்கலாமென தெரிவித்துள்ளார். அந்தடிப்படையில் தர்மநல்லூர் ஊரின் முன்னொட்டில் உள்ள தர்ம என்பது எமதர்மனின் பெயரினை

சுட்டும்விதமாக இருப்பதை பார்க்கும் போது முற்காலத்தில் இவ்வூரின் பெயர் கூட எமதர்ம நல்லூராக இருந்து பிறகு காலப்போக்கில் முன்னொட்டு தவிர்க்கப்பட்டு தர்மநல்லூராக உருமாற்றம் பெற்றிருக்கலாமெனத் தோன்றுகிறது. முதலில் தமிழ் எழுத்துக்கள் குறியீடுகளாக எழுதப்பட்டு பிறகு எழுத்துருக்களாக வளர்ச்சிப்பெற்றன. அந்த அடிப்படையில் தர்மநல்லூர் பகுதியில் வாழ்ந்த பண்டைய மக்கள் முதலில் தமிழை குறியீடுகளாகவும், பிறகு வளர்ச்சிப்பெற்ற வரிவடிவத்துடனும் எழுதியுள்ளனர். இதன் வழியே நோக்குங்கால் கீழடி போன்ற நகல் பகுதியில் வாழ்ந்த மக்களுக்கு இணையாக ஊரகப்பகுதியில் வாழ்ந்த எளிய தமிழ் மக்களும் கல்வி மேம்பாட்டுடன் வாழ்ந்துள்ளனர் என்பதை உணர்கிறோம்.

### சுடுமண் பொம்மை

தமிழ் எழுத்துப் பொறிப்பு கிடைத்தப் பகுதியின் மேற்குப் பகுதியில் சிதைந்த முதுமக்கள்தாழியின் அருகே கருப்பு-சிவப்பு நிற பானை ஓடுகள் அதிகம் காணப்பட்டன. அவற்றினூடே சுடுமண் பொம்மையின் தலையும், உடலும் உடைந்த நிலையில் கிடைத்தன. நன்கு சுடப்பட்ட இவ்வுருவத்தின் தலைமுடிவரி வரியாக காட்டப்பட்டுள்ளது. காதில் மார்பு வரை தொங்கும் நீண்ட மெல்லிய காதணிகளை அணிந்துள்ளது. கழுத்தில் மெல்லிய ஆரம் காணப்படுகிறது. முகம் நீள்வட்ட வடிவில் காட்சியளிக்கிறது. வளைந்த புருவம், நீள்வட்டவடிவ கண்கள், தட்டையான மூக்கு, தடித்த உதடுகள், எடுப்பானதாடை போன்றவை இவ்வுருவத்திற்கு அழகு சேர்கின்றன. இந்த சுடுமண் உருவத்தின் கலைத் தன்மையைப் பார்க்கும்போது இதன் காலம் கி.பி.முதல் நூற்றாண்டைச் சார்ந்ததாகுமென சென்னைப் பல்கலைக்கழக மேனாள் பேராசிரியர் பா.சண்முகம் அவர்கள் தெரிவித்துள்ளார்.

### திருகையின் சுழலும்பாகம்

சுடுமண் உருவம் கிடைத்த அதேப்பகுதியில் திருவைக்கல்லின் சுழலும் மேல் பாகமொன்று கிடைத்தது. இது வெள்ளை நிற மணற்கல்லினால் (Sandstone) உருவாக்கப் பட்டதாகும். இதன் நடுவில் 5 செ.மீ விட்டத்தில் தானியங்களை இடுவதற்கான துளை உள்ளது. தானியங்களை அரைப்பதற்கு ஏதுவாக திருகையின் விளிம்பு பகுதியில் விரலின் உதவியால் சூழற்றுவதற்காக துளை இடப்பட்டுள்ளன.

### வண்ண மணிகள்

இப்பண்பாட்டுப் பகுதியில் கருப்பு, சிவப்பு, வெள்ளை, மஞ்சள், ஊதா, பச்சை, பழுப்பு நிறங்களைக் கொண்ட வண்ண பாசிமணிகள் சேகரிக்கப்பட்டுள்ளன. இது போன்ற கல்மணிகள் கடலூர் மாவட்டத்தில் உள்ள மணிக்கொல்லை, சிலம்பிமங்கலம், பெரியப்பட்டு, ஆண்டார் முள்ளிப்பள்ளம், அன்னப்பன்பேட்டை, திருச்சோபுரம், தியாகவல்லி, குடிகாடு போன்ற ஊர்களிலும் கிடைத்துள்ளன. கடலூர் மாவட்டத்தில் கடற்கரையை ஒட்டியுள்ள குடிகாடு கி.பி.1-2ஆம் நூற்றாண்டில் வண்ண மணிகள் தயாரிக்கும் தொழிற்சாலையாகச் செயல்பட்டுள்ளது என்பது அகழாய்வின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது.[7]

### பிற பகுதியுடனானத் தொடர்பு

இப்பகுதியில் வாழ்ந்த மக்கள் அணிந்திருந்த மணிவகைகள் பிறப்பகுதிகளில் தயாரிக்கப்பட்டவைகளாகும். மேலும் வெளிர் சாம்பல் நிறம் கொண்ட ரௌலட்டட் வகை மட்கல ஓடுகள் களஆய்வில் கண்டறியப் பட்டுள்ளன. இவ்வகை மட்கலன்களின் பயன்பாடு இப்பகுதியில் புழக்கத்தில் இருந்துள்ளது. ஆனால் இங்கு ரௌலட்டட் வகை மட்கலன்கள் தயாரிக்கப்படவில்லை. மாறாக இம்மட்கலன்கள் ரோமானியர்களோடு தொடர்புடையவை என அறிஞர்கள்

கூறினாலும், சில ஆய்வாளர்கள் இவை வங்கப்பகுதியில் வனையப்பட்டவை என்ற கூற்றினை முன் வைக்கிறார்கள். தர்மநல்லூரில் வாழ்ந்த மக்கள் இவ்வகை மட்பாண்டங்களையும், இரும்புக் கருவிகளையும் பயன் படுத்தியுள்ளனர். இச்சான்றுகள் மூலம் இப்பகுதியில் வாழ்ந்த வரலாற்றுத் தொடக்கக் கால மக்கள் பிறப்பகுதி மக்களுடன் உள்நாட்டு வர்த்தகத் தொடர்பில் இருந்துள்ளனர் எனக் கருதலாம்.

## இடைக்கால பண்பாடு

பெரியத்தோப்பு பகுதியில் உள்ள பள்ளங்களில் இரும்புக்காலத்தைச் சார்ந்த தொல் பொருள்கள் கிடைக்கின்றன. ஆனால் பண்பாட்டுமேட்டின் மேற்பகுதியில் பின் இடைக்கால மக்கள் பயன்படுத்திய மட்கல ஓடுகள் கிடைக்கின்றன. ஆனால் வடக்கு, மேற்குப் பகுதியில் மண் எடுக்கப்பட்ட நான்கடி ஆழப் பள்ளத்தில் முன் இடைக் காலத்தைச் சார்ந்த சுடுமண் உறை கிணறுகளும், சிவப்பு நிற பானை ஓடுகள், தானியங்களை சேமிக்க பயன்படுத்தப்பட்ட சொர சொரப்பான தடித்த சிவப்புநிற பானை ஓடுகள், வீடுகளில் இருந்து கழிவு நீர்களை வெளியேற்றப் பயன்படுத்தப்பட்ட சுடுமண் குழாய்களின் உடைந்த பாகம், வட்டச்சில்லுகள், மட்பாண்டங்களை மூடுவதற்குப் பயன்படுத்தப்பட்ட மூடிகளின் உடைந்த பாகங்கள் சேகரிக்கப்பட்டுள்ளன. மேலும் வடபகுதியில் காணப்படும் ஐந்தடி ஆழ பள்ளமொன்றில் 4x12x24 செ.மீ அளவுள்ள செங்கற்களால் கட்டப்பட்ட கட்டடப்பகுதியொன்று வெளிப்பட்டிருந்தது.

## சுடுமண் உறைகிணறுகள்

பெரியத்தோப்பின் வடக்கு, மேற்குப் பகுதியில்மண்அள்ளப்பட்டசுமார்நான்கடி ஆழப் பள்ளத்தில் இடைக்காலத்தைச் சார்ந்த சுடுமண் உறைகிணறுகள் நான்கு இடங்களில் கண்டுபிடிக்கப்பட்டன. களிமண்ணால் செய்யப்பட்ட வட்ட வடிவிலான உறைகளைக் கொண்டு இக்கிணறுகள் உருவாக்கப்பட்டுள்ளன. உறைகள் ஒவ்வொன்றும் ஒரு அடி உயரமும், நான்கு அடி அகலமும் கொண்டவை. ஒவ்வொரு கிணற்றிலும் இரண்டு முதல் ஆறு உறைகள் வெளிப்பட்டிருந்தன. இக்கிணறுகள் ஒவ்வொன்றும் சராசரியாக 20மீ இடைவெளியில் அமைக்கப் பட்டுள்ளன. இது போன்ற உறைக் கிணறுகள் சங்ககால மக்களிடத்தே புழக்கத்தில் இருந்ததை "உறைக் கிணற்றுப் புறச்சேரி"[8] என பட்டினப்பாலை சுட்டுகிறது. சுடுமண் உறைகிணறு ஒன்றின் அருகே 30 செ.மீ நீளம் கொண்ட சுடுமண் குழாய் ஒன்றின் உடைந்த பாகம் கிடைத்துள்ளது. இதன் மூலம் இப்பண்பாட்டுப் பகுதியில் வாழ்ந்த இடைக்கால மக்கள் தங்கள் வீடுகளிலிருந்து கழிவுநீர்களை வெளியேற்ற சுடுமண்குழைகளைப் பயன்படுத்தியுள்ளனர். சங்க காலத்திலும் கழிவுநீர்களை வெளியேற்ற இதுபோன்ற சுடுமண் குழாய்கள் குடியிருப்பு பகுதிகளில் அமைக்கப்பட்டிருந்ததை "நெடுமால் சுருங்கை நடு வழிப் போந்து" என்ற பரிபாடல் வரிகளால் அறியமுடிகிறது. கீழடி, திருக்கோயிலூர், உறையூர் போன்ற இடங்களில் நடைப்பெற்ற அகழாய்வுகளில் சுடுமண் குழாய்களின் தொடர்கள் அகழாய்வில் கண்டறியப்பட்டுள்ளன.

## பண்பாட்டின் காலவரையறை

தர்மநல்லூரில் இரும்புக்கால மக்களைத் தொடர்ந்து முன் மற்றும் பின் இடைக்கால மக்களும் வாழ்ந்துள்ளனர். பெரியத்தோப்பின் வடக்குப் பகுதியில் கி.பி.1739ஆம் ஆண்டைச் சார்ந்த கல்வெட்டு ஒன்று உள்ளது.[9] பெரியத் தோப்பின் கிழக்கு, தெற்குப் பகுதியில் உள்ள பள்ளமான பகுதியில் கி.மு.4ஆம் நூற்றாண்டு முதல் கி.பி.3ஆம் நூற்றாண்டு வரையிலான காலக்கட்டத்தைச் சார்ந்த

முதுமக்கள் தாழிகள், கருப்பு - சிவப்பு நிற பானை ஓடுகள், வண்ணமணிகள், சிந்து சமவெளி பகுதியில் கிடைத்த குறியீடுகளை ஒத்த குறியீடுகள் போன்றவை கிடைத்து உள்ளன. இப்பண்பாட்டின் மேற்பகுதியில் கி.பி.10ஆம் நூற்றாண்டு முதல் கி.பி.18ஆம் நூற்றாண்டு வரையிலான காலக்கட்டத்தைச் சார்ந்த மக்களின் புழங்கு பொருட்களுடன் முதலாம் இராஜராஜ சோழனின் செப்பு நாணயமும் கிடைத்துள்ளன. எனவே கி.மு.4ஆம் நூற்றாண்டு முதல் கி.பி.18ஆம் நூற்றாண்டு வரை இங்கு மக்கள் தொடர்ந்து வாழ்ந்து வந்துள்ளனர் என்பதை இங்கு நடைபெற்ற களஆய்வின் முடிவுகள் உணர்த்துகின்றன. மேலும் இப்பண்பாட்டுப் பகுதியினை ஒட்டியப் பகுதியில் சமகால மக்களும் வாழ்ந்து வருவது தர்மநல்லூர் ஊரின் தோற்றப் பழமையை உணர்த்துவதாகவேக் கருதலாம்.

## முடிவுரை

அரசு என்ற அதிகார மையத்தின் தோற்றமென்பது தொல்குடிகளின் பரிணாமத்தோடு தொடர்புடையது. இதை சங்க இலக்கியத்தின் மூலம் உணரமுடிகிறது. பண்டையப் பாரதத்தில் கோலோச்சிய மகதம் மற்றும் அதைச் சுற்றியிருந்த பதினைந்து அரசுகளும் தொல்குடிகளில் இருந்து தோற்றம் பெற்றவைகளாகும்.[10] எனவேதான் இந்தியாவில் உள்ள அனைத்து ஊர்களிலும் தொல்லியல் ரீதியான ஆய்வுகளை மேற்கொண்டு அவ்வூர்களின் முழுமையான வரலாற்றினைத் தொகுத்து வெளியிடப்பட வேண்டும். அவ்வாறு வெளியிடப்படும் பட்சத்தில் தான் இந்தியாவின் சரித்திரம் முழுமை பெற்றதாக இருக்கும். இந்நிலையை நாம் அடைய ஊரகத் தொல்லியலுக்கு அரசு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டும். இக்கோட்பாட்டின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டதே தர்ம நல்லூர் களஆய்வாகும். இக்களஆய்வில் கிடைத்தத் தரவுகளின் வழியே தர்மநல்லூரில் வாழ்ந்த ஆதிமக்களின் வாழ்வியல் கூறுகளையும், பண்பாட்டின் வளர் படிநிலைகளையும் ஓரளவு அறியமுடிகிறது.

## நோக்கு நூற்பட்டியல்

1. புலியூர் கேசிகன், புறநானூறு, சாரதா பதிப்பகம், சென்னை, பா.எண்.18.
2. வெ.வேதாசலம், பாண்டியநாட்டு ஊர்களின் வரலாறு, தனலட்சுமி பதிப்பகம், தஞ்சாவூர், ப.19.
3. மேலது, ப.22.
4. மேலது, ப.26.
5. K.Rajan, Archaeological Gazetteer of Tamil Nadu, Manoo Pathippakam, Thanjavur, P.320.
6. கா. ராஜன், இரா. சிவானந்தம், இரும்பின் தொன்மை, தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை, சென்னை, ப.37.
7. க. இராச வேலு, கோ. திருமூர்த்தி, தமிழ்நாட்டுத் தொல்லியல் அகழாய்வுகள், பண்பாட்டு வெளியீட்டகம், சென்னை, ப.135.
8. மறைமலையடிகள், பட்டினப்பாலை, மணிவாசகர் பதிப்பகம், சிதம்பரம், ப.18
9. A.R.E., 1906, No.234.
10. ர.பூங்குன்றன், தொல்குடி வேளிர் வேந்தர், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், சென்னை, ப.23.